

சிலை 2033
( திசம்பர் - 2002 )

விலை:
உரு. 3.00

குரல் 25
இசை 9

சிறுவர்
கலை
இலக்கியத்
திங்களிதழ்

# தமிழ்ச்சிட்டு

# எழு தம்பி!

தூங்கி இருந்தது போதும்; எழு; தமிழ்த்
தம்பியே! — இளந்
தும்பியே! — எழில்
துள்ளும் தமிழ்நலம் காத்திடு; என்சொல்லை
நம்பியே! — பொற்
கம்பியே!

ஓங்கி உயர்ந்தநற் பல்கலை சேர்ந்ததுன்
நாடடா! — தேன்
கூடடா! — உல
கோர்க்கெலாம் நல்லறம் தந்ததென்(று) அப்புகழ்
பாடடா! — அதைத்
தேடடா!

ஊனில் உயிரினில் தோய்வுறச் செந்தமிழ்ப்
பாடியே! — வானம்
பாடியே! — இங்கு
உள்ள பழந்தமிழ் நூல்களை நீ, படி
நாடியே — இணை
கூடியே!

வீணர் செயலிலும் பேச்சிலும் வாழ்வினை
வீழ்த்தினாய்; — தமை
வாழ்த்தினாய்! — ஒளி
விளக்க மிலாத இருள்வழி யில்உனை
ஆழ்த்தினாய் — உயிர்
தாழ்த்தினாய்!

எல்லை யிலாத அறிவியல் விண்ணியல்
கூறுவாய் — அதில்
தேறுவாய் — எனில்
எத்தும் புரட்டும் இழிசெயல் யாவிலும்
ஊறுவாய் — உளம்
நாறுவாய்

தொல்லை தரும்இழி சாதிப் புகைச்சலை
மூட்டினார் — வாய்
நீட்டினார் — உன்
தொல்தமிழ் மக்களை வேற்றுமைத் தீயினில்
வாட்டினார் — துயர்
கூட்டினார்!

பள்ளிப் பறவையே! ஒன்றுனக் கோதுவேன்;
கேட்டிடு — உளம்
நாட்டிடு — கொடும்
பல்வழி போகுமுன் மக்களை ஒன்றெனக்
கூட்டிடு — வழி
காட்டிடு

உள்ளத் துயர்வே உயர்வெனக் கூறுக,
பிள்ளையே — தமிழ்க்
கிள்ளையே! — நெஞ்சில்
உண்மையும் வாழ்வில் ஒழுங்குமிலார் கன்கள்
நொள்ளையே — காது
தொள்ளையே!

— பாவலரேறு பெருஞ்சித்திரனார் —

-1966

சிறுவர் கலை இதழ்

குரல்-25 இசை - 12


"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!"

– பாவலரேறு


நிறுவனர்:

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:

தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:



**'தமிழ்ச்சிட்டு'**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச் சாலை,
சென்னை - 601 302.
தொலைபேசி - 277 1231.


# பாதுகாப்பு

நம் ஊரில் உள்ள பலருக்கு நம் ஊர்மீது பற்று இருப்பது இல்லை. நம் தாய்மொழி தமிழின்மீது பற்று இல்லாதது போலவே, நம் தாய் நிலமான தமிழ்நாட்டின் மீதும் பற்று இருப்பதில்லை.

அமெரிக்காவைப் பாருங்கள், இலண்டனைப் பாருங்கள் என்று பிதற்றுகிறவர்கள் நிரம்பப்பேர் உண்டு. அமெரிக்கக் கொடியின் வடிவத்தில் கைக்குட்டைகளையும் தலைக்கவிப்புகளையும் அணிந்து கொள்வதில் அவர்களுக்கு மயக்கம். அப்படிப்பட்டவர்கள் அந்த மயக்கத்தினால் தாங்களும் ஏமாந்து பிறரையும் ஏமாற்றுகின்றனர்.

உண்மையாகப் பார்த்தால் அப்படியானவர்களில் பலர் பக்கத்து ஊருக்குக் கூட போயிருக்க மாட்டார்கள்.

நம் தமிழ்நிலம் விரிந்த பரப்புடைய. அழகிய இயற்கை அமைப்புகளைக் கொண்டது. காடும், நிலமும், நீர்வளமும் செழிப்பாய்க் கொண்டது. உழைப்பால் உருவாக்கப் படுகிற பொருள் ஏராளம்.

இங்கு பயிராகாத பொருள் இல்லை என்பது போலவே தொழில் வளத்திலும் மிகச் சிறந்த நாடு நம் தமிழ்நாடு.

நம் நாட்டு வளத்தை, சிறப்பை உணர்ந்தால்தான் நம் நிலச் சிறப்புத் தெரியும். நம் நிலச் சிறப்புத் தெரிந்தால்தான் நம் மக்கள் வாழ்வின்மீது நம்பிக்கை பிறக்க முடியும்.

தம்மை நம்பாதவர்கள், பிறரை நம்பமுடியாது. நம் நிலத்தின்மீது நம்பிக்கை இல்லாததால்தான் பிற நிலம் நமக்குச் சிறப்பாகத் தெரிகிறது.

நம் தமிழ்நாட்டை நாம் முழுமையாகச் சுற்றிப் பார்க்க வேண்டும். அதன் வளம் எப்படியானது என அறிய வேண்டும். இங்கு என்ன என்ன இல்லை - இருக்கிறது எனப் பார்க்க வேண்டும். இல்லாதவற்றை உருவாக்க வேண்டும். இருப்பவற்றைப் பரப்ப வேண்டும்.

நம் நாட்டின் மீது நம்பிக்கை வைத்தால்தான் நம் தமிழ்நாட்டைப் பாதுகாக்கிற உணர்வு வரும். நம் நாட்டைப் பாதுகாத்தால்தான் நம் மக்களைப் பாதுகாக்கலாம். நம் மக்களைப் பாதுகாத்தால் நம் வாழ்க்கை பாதுகாக்கப்படும். நாம் மகிழ்வாக இருக்க முடியும்.

வீட்டுக்குக் கதவு என்பதும் பூட்டு என்பதும் எப்படித் தேவையோ அப்படி நாட்டுக்கும் தேவை. வீட்டிலிருந்து எதையும் யாரும் எடுத்துச் சென்றுவிட்டால் - திருட்டுப் போய்விட்டது என்று சொல்கிறோம். அதுபோல்தான் நம் தமிழ்நாட்டிலிருந்து வெளிநாட்டுக்காரர்கள் எடுத்துச் செல்வதையும் திருட்டு என்று சொல்ல வேண்டும்.

நம் வீட்டையும், நாட்டையும் பாதுகாத்தால் நம் வாழ்க்கையும் பாதுகாக்கப்படும்.

அதுதான் நமக்கும் பாதுகாப்பு! !


## தமிழ்ச்சிட்டு

(சிறுவர் கலை இலக்கியத் திங்களிதழ்)

- ☐ ஆண்டுக் கட்டணம் உரு. 36.00
- ☐ வாழ்நாள் கட்டணம் உரு. 350.00
- ☐ தனி இதழ் உரு. 3.00

**வெளிநாட்டுக் கட்டணம்**

1. வானூர்திவழி ஆண்டுக் கட்டணம் உரு. 250.00
2. கப்பல்வழி ஆண்டுக் கட்டணம் உரு. 200.00

# உங்களுக்குத் தெரியுமா?

- இந்தியத் துணைக் கண்டத்தில் எரிமலைகள் இல்லை.
- பூட்டானில் திரையரங்குகள் இல்லை.
- அரேபியாவில் ஆறுகள் இல்லை.
- சிங்கப்பூரில் காக்கைகள் இல்லை.
- புருனே நாட்டில் வரிகள் இல்லை.
- மலைப் பாம்புகளுக்கு நஞ்சில்லை.
- கடலில் முதலைகள் இல்லை
- எந்தப் பறவைக்கும் வியர்வைச் சுரப்பில்லை.
- அன்னாசிப் பழத்திற்கு விதைகள் இல்லை.
- அத்தி, பலா மரங்கள் பூப்பது இல்லை.
- அரிமாவும் (சிங்கமும்), புலியும் ஒரே காட்டில் வாழ்வது இல்லை.
- சோர்டன் ஆற்றில் மீன்கள் இல்லை.
- அண்டார்டிக் கா கண்டத்தில் மரங்கள் இல்லை
- கிவி என்ற பறவைக்கு இறக்கை இல்லை
- ஆவாய் தீவில் பாம்புகள் இல்லை.

- தொ. எழில்நிலவன்,
களமருதூர்

# நூலகம்

நூலகம் இல்லாத இல்லம் பாழகம் ஆகும் என்றார் நம் பாவலரேறு ஐயா.

ஒவ்வொரு வீட்டிற்கும் நூலகம் தேவை.

தொலைக்காட்சிப் பெட்டிவழி நாம் அறிவுச் செய்திகளைத் தெரிந்து கொள்வதைவிட, நூல்கள்வழியே நிறைய அறிவுச் செய்திகளைப் பெற முடியும்.

எனவே நூலகங்களின் பயனை விளக்கி சிறுவர் ஊர்வலம் பல்சுவை அரங்கம், பாட்டரங்கம், நூல்கள் - ஓவியக் கண்காட்சிகளை நடத்தினர் கோவை மாவட்ட அனுப்பப்பட்டி இளைஞர்கள்.

கடந்த 24.11.2002 அன்று நூலகத் திருவிழா சிறப்புற நடந்தது. ஊராட்சித் தலைவர்கள் - இன்னும் பொறுப்பினர் பலரும் கலந்து கொண்டனர். அங்கு நடைபெற்ற ஊர்வலத்தில் சிறுவர்கள் முழங்கிய முழக்கத்தில் சில...

அம்மா அம்மா கதை சொல்லு!
அன்னைத் தமிழால் கதை சொல்லு!

பாட்டி பாட்டி புதிர்போடு
பழமொழி பாட்டு நீ கூறு!

அப்பா நூலகம் வருவீரே - தேர்ந்
தெடுத்துத் தருவீர் நூல்களையே!

பள்ளி நூலகம் இணையட்டும்
பாங்குறக் கல்வி வளரட்டும்!

இடையில் நின்ற மாணவரே
தொடர வருவீர் நூலகமே!

இனிய நாளில் மகிழ்ந்திடுவோம்
பரிசு நூல்கள் வழங்கிடுவோம்!

சிட்டு சிட்டு ‘தமிழ்ச்சிட்டு’
ஒவ்வொரு வரியும் தேன் சொட்டு!

❖

# எண்கள் வரும் குறள்கள்...!

எண்கள் வரும் குறட் பாக்கள் வேண்டுமா, சொல்கிறேன்.

தன்துணை இன்றால்
பகைஇரண்டால்
தான்ஒருவன்
இன்துணையாக்
கொள்கவற்றின் ஒன்று
- 875

இதுபோல் 47 குறட் பாக்களில் ஒன்று வருகிறது.

தானம் தவம் இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின் - 19

இதுபோல் 13 குறட்பாக்களில் இரண்டு வருகிறது.

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று - 941

இதுபோல் 8 குறட்பாக்களில் மூன்று வருகிறது.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் - 35

இதுபோல் 11 குறட்பாக்களில் நான்கு வருகிறது.

ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி - 25

இதுபோல் 12 குறட்பாக்களில் ஐந்து வருகிறது.

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு - 381

இரண்டே குறட்பாக்களில் ஆறு வருகிறது.

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தம்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு - 107

இதுபோல் 8 குறட்பாக்களில் ஏழு வருகிறது.

*கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை - 9*

இந்த ஒரே குறளில்தான் எட்டு வருகிறது. ஒன்பது என்ற சொல் திருக்குறளில் வரவில்லை.

*பல்லார் பகைகொளலிற் பத்துஅடுத்து தீமைத்தே*
*நல்லார் தொடர்கை விடல் - 450*

இந்த ஒரே குறளில்தான் பத்து வருகிறது. போதுமா... இன்னும் நூறு, ஆயிரமெல்லாம் வேண்டுமா?

"கொடுத்தால் வேண்டாமென்று சொல்வோமா? எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறோம்."

*ஒன்றெய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்*
*நன்றெய்தி வாழ்வதோ ராறு - 932*

இந்த ஒரே குறளில்தான் நூறு வருகிறது.

*அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத்து உண்ணாமை நன்று - 259*

இந்த ஒரே குறளில்தான் ஆயிரம் வருகிறது.

*ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப*
*கோடியும் அல்ல பல - 337*

இதுபோல் 4 குறட்பாக்களில் கோடி வருகிறது.

*நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்*
*பத்தடுத்த கோடி யுறும் - 817*

இந்த ஒரே குறளில்தான் பத்துக்கோடி வருகிறது.


*பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்*
*எழுபது கோடி யுறும் - 639*

இந்த ஒரே குறளில்தான் எழுபது கோடி வருகிறது.

*அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்*
*குன்றுவ செய்தல் இலர் - 954*

இதுபோல் இரண்டு குறட்பாக்களில் அடுக்கிய கோடி வருகிறது. போதுமா?

- பதினாறுகவனகர் இரா. கனகசுப்புரத்தினம் அவர்களின் 'கேட்டதும் கிடைத்ததும்' நூலிலிருந்து



# கலிலியோ கலிலி என்ன தவறு செய்தார்?

- தமிழம் பன்னீர் -

இந்த நிகழ்ச்சி நடந்தது 1633 இல் இத்தாலி நாட்டின் உரோம் நகர வாடிகன் நகர்ப் பகுதியில் வழக்கு மன்றம் அது அரை வட்ட வடிவில் அமைந்துள்ளது. அதில் போப்பாண்டவரும் தலைமைக் குருக்களும் மெய்யியலார்கள், தனித்துறை வல்லுநர்கள், நகரப் பெருமக்கள் ஆகியோரும் அமர்ந்திருக்கின்றனர். போப்பாண்டவர் மன்றத்தின் நடுவில் அமர்ந்துள்ளார். மக்கள் கூட்டத்தால் நிரம்பி உள்ளது அந்த மன்றம்.

அறுபத்தொன்பது அகவை நிரம்பிய முதியவர் ஒருவர் ஒரு பக்கத்தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு உள்ளார். தமக்கு இழைக்கப்பட்ட மானக் கேடுகளைப் பொருட்படுத்தாமல் பெருமிதத் தோற்றத்தில் இருக்கிறார். இருப்பினும் அவர் உடை கசங்கி இருந்தது; தலைமுடி நரைத்தும், முகம் சோர்ந்தும், உடல் களைப்புற்றும் இருந்தன.

பாரிசு நகரில் இருந்த அவரை உசாவல் குழுவினர் அங்கு வரும்படி கட்டளை இட்டிருந்தனர். அந்த முதியவர் அப்பொழுது கடுமையாக நோய்வாய்ப் பட்டிருந்தார். அவருடைய மருத்துவர்கள் அவரை அங்குப் போக வேண்டாம் என்று தடுத்தனர். அப்பொழுது கடுங் குளிர்காலம். அவர் எதையும் பொருட்படுத்தாமல் மிகுந்த தொல்லைப்பட்டுத் தம் செல்கையை மேற்கொண்டார்.

அவர் என்னதான் அப்படி ஒரு பெரிய, தலைபோகிற குற்றத்தைச் செய்துவிட்டார்? இந்தப் புடவியில் (UNIVERSE) நாம் வாழும் உலகம் தான் (EARTH) கதிரவனைச் சுற்றுகிறது என்றும் கதிரவன் நம் உலகைச் சுற்ற வில்லை என்றும் கூறினார். தாம் ஆராய்ந்து உறுதி செய்த உண்மையைத்தான் அவர் கூறினார். அதுதான் மிகப்பெரிய குற்றம் என்று கத்தோலிக்கப் பேரவை கருதியது. அதனால் அவர் அந்தப்

பேரவையினரின் கடுஞ்சினத்துக்கு ஆளானார். அவர்தாம் அறிவியலார் கலிலியோ கலிலி. போப்பாண்டவர் பிராட்டசுடன்டு (PROTESTANT) சமய வளர்ச்சியைத் தடுக்கும் செயலில் ஈடுபட்டு இருந்தார். கலிலியோவின் நூல் கத்தோலிக்கப் பேரவையை மதிக்காமல் அதை இழிவுபடுத்தியதாக அவர் கருதினார். உரோமன் கத்தோலிக்க மதத்துக்கு எதிராக அது பயன்படுத்தப் படக்கூடும் என்று அவர் அஞ்சினார். அதனால் அவர் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் அந்த முதியவர்மீது கொஞ்சங்கூட இரக்கம் காட்டவில்லை.

வழக்கு மன்றத்தின் நடுவில் அமர்ந்திருக்கும் போப்பாண்டவர் சீற்றத்துடன் காணப்படுகிறார். அடிக்கொரு தரம் தம் தலையைத் தாழ்த்தி வழக்கு நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கிறார். அவ்வப்போது தலையை உயர்த்தி அந்த முதியவரைக் கடுஞ் சினத்துடன் நோக்குகிறார். கலிலியோவுக்குத் தண்டனை வழங்குவதில் குறியாக உள்ளார். போப்பாண்டவரைப் பொறுத்தமட்டில் கலிலியோ பெருந் தீங்கை விளைவிக்கும் மிகக் கொடிய குற்றம் செய்தவர் ஆகிறார். அந்த நூலின் அறிவுரைகள் பேரவையின் அதிகாரத்தைக் குறைத்துவிடக் கூடும் என்று அஞ்சுகிறார். இதனால் கலிலியோ தண்டிக்கப் பட்டு உயிர் இழக்கத்தான் வேண்டும் என்று எண்ணினார்.

இந்த வழக்கு நடைபெற்ற துயரநாள்களில் கலிலியோ குற்றவாளிக் கூண்டில் நிற்பார். உசாவல் குழுவினர் கேள்விமேல் கேள்வி கேட்டு அவரை மிகவும் துன்புறுத்துவர். அவர்மீது அவர்கள் சிறிதேனும் இரக்கம் காட்டுவதாத் தெரியவில்லை. போப்பாண்டவருடைய அலுவலர்களும் கலிலியோ மத எதிர்ப்புக் குற்றத்தைச் செய்ததாக மெய்ப்பிப்பதில் அதிக ஆர்வம் கொண்டு இருந்தனர். அவர்கள் எல்லாரும் ஒத்த கருத்துடன் கலிலியோவை எரிப்பதற்குத் தீர்ப்பளிக்கத் தமக்கு உதவுவார்கள் என்றே போப்பாண்டவர் முழுமனத்துடன் நம்பினார்.

உசாவல் குழுவில் கலிலியோவின் நண்பர்கள் பலர் இருந்தனர். அவர்கள் தங்கள் கடமையைச் செய்யும்அதே நேரத்தில் ஒவ்வொரு நாள் நடவடிக்கைக்குப் பின்பும் இந்த வழக்குப் பற்றிப் பேசினர். அவர்கள் போப்பாண்டவருடன் உணவு அருந்தும் பொழுதும் உரையாடும் பொழுதும் கலிலியோவின் குற்றங்களைக் குறைத்துக் கூறினர். அப்பொழுது ஓர் அமைதியான சூழலை அங்கே உண்டாக்கினர். போப்பாண்டவர் மனத்தை இளகச் செய்து கலிலியோவின் உயிரைக் காப்பாற்ற முயற்சி செய்தனர்.

கலிலியோவைப் போல் உசாவலுக்கு உட்பட்டு கடந்த காலத்தில் பலர் மரண தண்டனைக்கு ஆளாயினர். அப்படிப்பட்ட மத எதிர்ப்பாளர்களுக்கு இல்லாத ஒரு நன்மை கலிலியோவுக்கு இந்த நெருக்கடி நேரத்தில் அவர் தம் வாழ்க்கைப் போக்கில் செல்வர்கள் பலருடன் நட்பு கொண்டு இருந்தார். இப்பொழுது போப்புக்கு

நெருக்கமாக உள்ள அவர்கள் தம் உயிரைக் காப்பாற்றக் கூடும் என்று அவர் நம்பினார். அவர்கள் தாம் அஞ்சத்தக்க ஆய்வுக்குழு உறுப்பினர்கள். அவர்கள் பேரவையின் எல்லா அதிகாரங்களையும் பெற்று இருந்தனர். அவர்கள் விரும்பினால் கலிலியோவைக் கொடுமைப் படுத்தலாம் அல்லது அவருக்கு மரணதண்டனை அளிக்கலாம்; அல்லது பழுக்கக் காய்ச்சிய ஊசிகளை அவர் உகிர்(நக)க் கண்களில் ஏற்றச் செய்யலாம். அவர்கள் இப்படியெல்லாம் கடந்த காலத்தில் ஏராளமான பேர்களுக்குச் செய்துள்ளனர். அவர்கள்தாம் 1600இல் கியார்டோனா புருனோ (GIARDONO BRUNO) என்னும் மெய்யியலாரை மத எதிர்ப்புச் செயலுக்காக உயிரோடு எரித்துக் கொன்றவர்கள்.

மற்றும் கலிலியோவின் கருத்தை ஏற்காத பலர் ஆய்வுக் குழுவில் இருந்தனர். கலிலியோ அறிவியல் சிந்தனையாளர் என்பதால் அவர்கள் அவர்மீது அதிக மதிப்பு வைத்திருந்தனர். அவர்களும் அவரைக் காப்பாற்ற முயற்சி செய்தனர்.

ஒவ்வோர் உசாவலின்போதும் கலிலியோ தாம் குற்றம் அற்றவர் என்றே கூறினார். தாம் உயிர் பிழைத்துக்கொள்ள தம்முடைய கருத்துகளைக்கூட மாற்றிக் கொள்ள உடன்பட்டார். குறுக்கு உசாவல் முடிந்தது. தீர்ப்பு வழங்கும் நேரம் வந்தது. கலிலியோ, கடைசிமுறையாகக் குற்றவாளிக் கூண்டுக்குக் கொண்டு வரப்படுகிறார். போப்பாண்டவர் வழக்குமன்ற இருக்கையில் அமர்கிறார். மன்றம் அமைதியில் ஆழ்கிறது. தீர்ப்பு எப்படி இருக்குமோ என்று அனைவர் மனமும் தவித்துக் கொண்டு உள்ளது.


ஆய்வு மன்ற அலுவலர் வழக்கு மன்றம் வருகிறார். வழக்கு உசாவல் பற்றிய கோப்பு அவரிடம் உள்ளது. கலிலியோவின் உயிர் பிழைக்குமா அல்லது அன்றோடு முடிவடையுமா என்பதற்கான குறிப்பு அதில்தான் உள்ளது. வழக்கு மன்றத்தில் பெருந்திரளாகக் கூடியிருக்கும் அதிகாரிகளை அவர் நோக்குகிறார். பின்பு அவர் வழக்கின் தீர்ப்பைப் படிக்கிறார். அவர் குரல் மன்றம் முழுவதிலும் எடுப்பாக ஒலிக்கிறது. “கலிலியோ ஒரு குற்றவாளி; அவர் தம் எஞ்சிய வாழ்நாளைச் சிறையில் அடைக்கப்பட்டுக் கழித்தல் வேண்டும்” என்பதே அந்தத் தீர்ப்பு.

நாகரிக வளர்ச்சி பெறாத அந்தக் காலத்தில் இந்த மதத் தலைவர்கள் எவ்வளவு காட்டு விலங்காண்டித் தனமாக நடந்தனர் என்பதையே இந்த நிகழ்ச்சி காட்டுகிறது. ஆயினும் இந்த நாளிலும் மதவெறியாளர் ஆட்டம் தணியவில்லை. இதற்கெல்லாம் நாம்தாம் காரணம். நாம் மதங்களுக்குத் துணை போவதால்தானே மதத்தலைவர்கள் உள்ளனர். அவர்கள் மதம் பிடித்து ஆடும் ஆட்டங்களுக்கு நாம்தான் ஆளாகிறோம் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

# துறவிக்கு வணங்கிய அரிமா

மேற்குத் தொடர்ச்சி மலைக் காட்டில் துறவி ஒருவர் இருந்தார்.

அவர்தன் ஒ க த் திறமையால் ஓ ர அரிமாவை (சிங்கத்தை)க் கட்டுப்படுத்தி வைத்திருப்பதாக ஊரே பேசிக் கொண்டது.



ஒருநாள் அறிஞர் ஒருவர் அங்குச் சென்றவர் அந்தத் துறவியைக் கண்டார். அன்று இரவு அங்கேயே தங்கிக் கொண்டார்.

இரவு 10 மணி அளவில் துறவியார் அமைதியாக ஆழ்நிலை அமர்வில் (தியானத்தில்) அமர்ந்தார். பின் இரவு 3 மணி ஆன பின்னும் அவர் அந்த அமர்வி லிருந்து விலகவில்லை.

அப்போது திடுமென அரிமாவின் முழக்க ஒலி கேட்டது. சிறிது நேரத்தில் அந்த அரிமாவும் அங்கு வந்தது. அந்தத் துறவியாரின் கால்களை நக்கியது. துறவியார் கண் விழித்து அதன் தலையை அன்போடு தடவிக் கொடுத்தவர் பின், ‘இனி நீ போகலாம்’ என்றார். அரிமாவும் அவர் சொன்னபடியே வெளியே போய்விட்டது.

அதைப் பார்த்து வியப்படைந்த அறிஞர் துறவியாரிடம் எப்படி அரிமாவை வயப்படுத்தினீர் என்று வினவினார்.

அதற்கு அந்தத் துறவியார் “நான் அரிமாவை வயப்படுத்த வில்லை. அந்த அரிமாவை யாரோ சுட்டுவிட்டார்கள். காலில் காயத்தோடு நடக்க முடியாமல், வேட்கை வறட்ட நடக்கமுடியாமல் முணகிக் கொண்டே அதுபடுத்துக் கிடந்தது. அதைப் பார்த்து வருத்தப்பட்டு, உடனே அதற்குத் தண்ணீர் தந்தேன். சில மூலிகைகளைக் காயத்துக்குக் கட்டிச் சில நாள் வரை மருத்துவம் செய்தேன். அப்படி மருந்து போடும் போதெல்லாம் அது என் காலை நக்கிக் கொண்டே இருக்கும். அந்தப் பழக்கம் தான் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. மற்றப்படி நான் ஏதும் மந்திரம் எல்லாம் செய்யவில்லை என்றார் அந்த உண்மைத் துறவியார்.

மாய வித்தைகள் காட்டியும், மழைக்காக வேள்வி செய்தும் ஏமாற்றுகிற உலகத்தில் இப்படி உண்மையைச் சொன்ன துறவியாரைப் பெருமைப் படுத்தினார் அந்த அறிஞர். □

# நீலமலை வண்டி

கடல் மட்டத்திலிருந்து 7500 அடி உயரம் உள்ளது நீலமலை. இன்றைக்கு உதகமண்ட்(ஊட்டி) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் ஒற்றைக்கல் மந்தை எனும் ஊருக்கு, கி.பி. 1854ஆம் ஆண்டு தொடர்வண்டி போடத் திட்டமிடப்பட்டது.

பல்வேறு சிக்கல்களும் தொல்லைகளும் கொண்ட அந்தத் தொடர்வண்டிப் பாதை 28½ கற்கள்(மைல்) தொலைவுடையது.

1854ஆம் ஆண்டே திட்டமிடப்பட்டிருந்தாலும், 1908ஆம் ஆண்டுதான் அதைப் போட்டு முடித்திருக்கிறார்கள்.

# உருவைக் கண்டு எள்ளாதே

-க. சண்முகசிதம்பரம்-

குட்டிச் சுவரின் அருகினிலே
கழுதை ஒன்று நின்றது
கட்டெறும்பு ஒன்று அதன்
காலின் அருகில் விழுந்தது!

கழுதை: கட்டெறும்பே உன்னையும்
காலால் மிதிக்கப் போகிறேன்
எட்டி நீயும் செல்லாது
என்னிடத்தில் நிற்பதேன்!

கட்டெறும்பு: சுவரில் ஏறிச் செல்கையில்
சறுக்கி விட்ட தாகையால்
தவறி நானும் விழுந்திட்டேன்
தவற்றைப் பொறுத்துக் கொள்ளுங்கள்!

கழுதை: என்றன் பின்னால் வருதற்கே
மாந்தர் கூட அஞ்சுவர்
சின்ன எறும்பு நீயுமோ
என்னைச் சீண்டிப் பார்க்கிறாய்!

நாளும் பொதியைச் சுமக்கிறேன்
நன்றாய்க் கொழுத்தும் இருக்கிறேன்
உனக்கு என்ன மன்னிப்பா
உன்னை மிதிக்கப் போகிறேன்.

காலைத் தூக்கி மிதிக்கையில்
காற்றும் சுழன்று அடித்தது
கீழே கிடந்த கட்டெறும்பு
கழுதை காதில் விழுந்தது.

காதில் எறும்பும் நுழைந்திட
கழுதை வலியால் துடித்தது
வீதி யெங்கும் ஓடியே
வீழ்ந்து கத்திப் புரண்டது.

எளிமை யானோர் என்பதால்
ஏளனங்கள் செய்வதா?
வலிமை யற்றோர் என்பதால்
வருத்தம் செய்தல் ஆகுமோ?

# அறிவோடு வாழ்வோம்!

அன்னை தெரேசாவிற்கு உலக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அந்த விழாவில் விருந்து ஏற்பாடு செய்யப் பட்டது.

விருந்து ஏற்பாடு செய்தவர்களிடம் அன்னை தெரேசா இவ்வாறு சொன்னார்கள்: "ஐயா, விருந்திற்காகும் செலவை யெல்லாம் என்னிடம் கொடுத்து விடுங்கள். நான் அந்தப் பணத்தைக் கொண்டு ஏழை, எளிய மக்களுக்குத் தொண்டு செய்ய உதவியாக இருக்கும்" என்றார்.

ஒருவரின் அளவுக் கதிகமான உணவு இன்னொருவன் பட்டினி அன்றோ? விருந்து என்ற பெயரில் வீணடிக்கப்படும் உணவும் பத்தி என்ற பெயரால், குடிக்க நீர்கூடக் கிடைக்காத இங்கே ஆண்டவனுக்குப் பால், தேன், நெய்யில் குளிப்பாட்டுவதும் மடமை இல்லையா?

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கடைகளில் படைக்கப்பட்ட பின், சாலைகளில் உடைக்கப்பட்டு வீணாகும் தேங்காய்களின் எண்ணிக்கைக்குக் கணக்கேது.

அறியாமையின் பிள்ளைதான் வறுமை. அறியாமை இருளை விரட்டி அறிவோடு வாழ்வோம்!

□

# காலம்

சிறந்த அறிவியல் அறிஞரும் மொழிப் புலவருமான பெஞ்சமின் பிராங்களின் ஒரு பொத்தகக் கடை நடத்தி வந்தார். அவரிடம் அரிய நூல்கள் செறிந்திருந்தன. நச்சு இலக்கியம் அல்லாத நல்ல இலக்கியம் படிப்போர் அவரின் பொத்தகக் கடைக்கு நிறைய வந்தனர்.

ஒருமுறை பொத்தகம் வாங்க வந்த ஒருவர் ஒரு நூலைத் தேடி எடுத்து, "இந்தப் புத்தகத்தின் விலை என்ன ?" என்று கேட்டார்.

"ஒரு தாலர்" என்றார் பெஞ்சமின்.

நூலின் விலை அதிகமாக இருப்பதாகக் கூறி விலையைக் குறைத்துத் தரப் பெஞ்சமினிடம் முப்பது நிமையம் உரையாடினார். ஆனால் திடுமெனப் பொத்தகத்தின் விலையை 'இரண்டு தாலர்' என்றார் பிராங்களின்.

நூலை வாங்க வந்தவர் "நான் விலையைக் குறைக்க முயன்று கொண்டிருக்கின்றேன். நீங்களோ விலையை ஏற்றிச் சொல்கிறீர்களே" என்றார்.

"உன்னோடு பேசியதால் எனக்கு என் வாழ்நாளில் முப்பது நிமைய நேரம் வீணாயிற்று; ஆகையால் பொத்தகத்தின் விலையும் அதிகமாயிற்று" என்றார் பெஞ்சமின் பிராங்களின்.

தமிழ்ச்சிட்டுகளே!

காலம் பொன் போன்றது என்பார்கள். அது தவறு. பொன்னுக்கு விலையுண்டு. காலத்திற்கு விலை இல்லை.

ஒவ்வொரு துளியும் மழையாகும். அதுபோல் நொடி, நிமையமாகி, நிமையம் மணியாகி, மணி நாளாகி, நாள் கிழமையாகி, கிழமை மாதமாகி, மாதம் ஆண்டாகிப் போகும்.

எனவே, காலத்தை வீணடிக்காதீர். இளமையில் கற்பது இனிமையானது. இன்பமானது. காலம் காலம் போன்றதுதான். இழந்த காலம் மீண்டும் வராது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அறிவாய் வாழுங்கள்!

# அறிவுத் துளி

- பெ. குமாரி, புதுவை

- ஆற்றில் துணியை அடித்துத் துவைக்கும் ஒலி மறுகரையில் இருமுறை கேட்கிறதே ஏன்?

  துவைக்கும் ஒலி ஆற்று நீரின் வழியாகவும், மற்றும் காற்றின் வழியாகவும் ஆக இரண்டு ஊடகங்களின் வழியாகச் செல்வதால் இரு முறை ஒலி கேட்கிறது.

- நிலவுக்கும் நிலத்திற்கும் இடையில் உள்ள தூரம் 2,38,860 கல் அளவாகும்.

- நிலவின் விட்டம் 2160 கல் தொலைவு.

- வானில் பறந்த முதல் பெண்மணி வாலண்டினா.

- விண்மீன்களின் நிறம் எதைக் குறிக்கிறது?

- விண்மீன்களின் நிறம்தான் அவற்றின் அளவைக் காட்டுகிறது. நீலநிற விண்மீன்கள் பெரியவை. மிகவும் வெப்பமுடையவை. நன்கு ஒளிவிடுபவை. அவற்றின் மேற்பரப்பு வெப்பம் 27,750 பாகையும் அதற்கு மேலும் உடையவை. சிவப்பு விண்மீன்கள் குறைந்த அளவு வெப்பமுடையவை. இதன் வெப்ப அளவு 1650 பாகையும் அதற்கு குறைவும் கொண்டவை. மஞ்சள் நிறமுடைய கதிரவனின் மேற்பரப்பு வெப்ப அளவு 6000 ....... இது நடுத்தர விண்மீன்.

- கதிரவன் விண்மீன்தான். இதுதான் நிலவுலகின் அருகில் உள்ள விண்மீன். இதன் தொலைவு நிலத்திலிருந்து 930 இலக்கம் கல் அல்லது 1500 இலக்கம் அயிர மாத்திரி.

- அமெரிக்க விண்வெளி நிறுவனத்தின் பெயர் 'நாசா'.
- ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் பெயர் 'ஈசா'.
- புகையின்றி எரியும் பொருள் வெடியக மாவியம் ('நைட்ரோ செல்லுலோசு')
- விண்வெளியில் ஓசோன் படலத்தை விரைந்து அழித்து வரும் வளி வெளிறிய பாயணக் கரியம் (குளோரோப் புளுரோ கார்பன்கள்)
- தனித்த நிலையில் கிடைக்கும் ஒரே மாழை வெள்ளி.
- நம் உடலைப் புதிர்படம் எடுக்க வேண்டுமானால் எத்தனை விநாடி கதிர் வீச்சை உடலின் மேல் செலுத்த வேண்டும்?

  12 விநாடி.
- வெள்ளணுக்களின் வாழ்நாட் காலம் நான்கு நாட்கள்.
- வெள்ளணுக்கள் எலும்பின் மஞ்சள் மச்சையில் உருவாகிறது.
- சிவப்பணுவின் வேலை திசுக்களுக்கு உயிர் வளி எடுத்துச் செல்வது.
- விழித்திரையில் தோராயமாக அறுபது இலக்கம் கூம்புகள் உள்ளன.
- ஒரு விழித்திரையில் 12 கோடித் தண்டுகள் உள்ளன.
- குயில் குளிர்காலத்தில் கூவுவது கிடையாது.
- நீருக்கடியில் நீந்திச் செல்லும் ஒரே பறவை பென்குவின். ஆண் பென்குவின் பறவை தான் முட்டையை அடை காக்கின்றது.
- அதிகாலை நேரத்தில்தான் வாத்து முட்டையிடும்.
- மின்னல் ஒரு விநாடிக்கு 28,500 கல் வேகத்தில் நிலத்தை நோக்கிப் பாய்கிறது.
- வானவில்லை முழு வட்டமாக வானூர்தியில் செல்லும்போது பார்க்கலாம்.

□

# அஞ்சாதே! துஞ்சாதே!

எதிர்ப்பார் என்றே
எதற்கும் அஞ்சிச்
சாகாதே - நெஞ்சம்
வேகாதே!

கொதித்தால் பகைவர்
தூள்தூள் ஆவார்
மறவாதே - வீரம்
துறவாதே!

நன்றெனப் பட்டதை
நாடே எதிர்ப்பினும்
அஞ்சாதே - செய்ய
அஞ்சாதே!

கற்கும் காலம்
கண்ணை மூடித்
தூங்காதே - பின்
ஏங்காதே!

– புதுவை
தமிழ்நெஞ்சன்

சொல்லைச் செயலாய்
மாற்ற வேண்டும்
மறவாதே -
செயலைத்
துறவாதே!

மதிஞர் வழியில்
மனத்தைப் பதிக்கத்
தயங்காதே - மதி
மயங்காதே!

'விதி'யின் பெயரால்
வீதியில் கிடந்து
சாகாதே - வீண்
போகாதே!

உலகைப் பொதுவாய்
ஆக்க எழுவாய்
உறங்காதே- பகைக்கு
இறங்காதே!

எரியும் நெருப்பில்
சோறு சமைக்க
மறக்காதே - தீயைத்
துறக்காதே!

புரியும் செயலில்
பொதுமை உலகம்
அஞ்சாதே -
தனிஉடமை
மிஞ்சாதே!

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 645/2002
T.N. P.M.G. (NR) 645/2002 தமிழ்ச்சிட்டு

# தென்மொழி நாள்காட்டி

**தி.பி. 2034** **கி.பி. 2003**




- பொலிவான தோற்றங் கொண்ட பல்வண்ணப் படம்.
- அறிஞர் பெருமக்களின் தமிழ் மொழி - இனம் - நாடு பற்றிய தெள்ளிய கருத்துரைகள் - பொன்மொழிகள்
- நினைவு கூர்தற்கான நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு குறிப்புகள்

**இன்ன பல சிறப்புகளுடன் அணியமாகிக் கொண்டிருக்கிறது.**

**அன்பர்கள் தம் தேவையும் பிறவுங் குறித்து எழுதுக!**

விற்பனையாளர்கள் தொடர்புகொள்க!

விளத்தங்கட்கு:

அமைச்சர், **தென்மொழி,**
மேடவாக்கம் கூட்டுச் சாலை,
சென்னை - 601 302
தொலைபேசி : 277 1231.

தமிழ்ச்சிட்டு, மேடவாக்கம், சென்னை - 601 302.